## PBZ இன் பல்வகையான வசதிகள்

14 PBZ-நூலகங்கள் பல்வேறு தேவைகளுக் கும் உகந்த இடவசதியை வழங்குகின்றன. எமது வசதிகளை பலவர்ணக்காட்சிக் குழாய் ஒன்றுடன் ஒப்பிடலாம்: அரை மில்லியனுக் கும் மேற்பட்ட வித்தியாசமான ஊடகங்களை இரவலாக வழங்குவது, பதிவிறக்கம் செய்து கொள்வது அல்லது நூலகத்தில் பாவித்துக் கொள்வது, அத்துடன் வருடாந்தம் சிறுவர் மற்றும் பெரியவர்களுக்கான 600 க்கும் கிட்டத்தட்ட நிகழ்ச்சிகள் இடம்பெறுகின்றன.

இதனூடாக நாம் சூரிச்சில் வாழும் பல மக்களின் இதயங்களுடனும் உள்ளங்களு டனும் அத்துடன் பிற கலாச்சாரங்களுடனும் தொடர்பு கொள்வதுடன், வாசிக்கும் திற மையை ஊக்குவித்து எழுதியிருக்கும் வார்த்தைகளில் மகிழ்வைத் தூண்டுகிறோம்.




பெரியவர்கள் முழு வசதிகளையும் வருடாந்தம் 40 பிராங், 70 பிராங் அல்லது 95 பிராங் செலுத்திப் பாவித்துக் கொள்ளலாம். 16 வயதுக்கு உட்பட்ட பிள்ளைகளுக்கு இது இலவசமானதாகும். நீங்கள் டிஜிற்றல் ரீதியாக வாசிக்கின்றீர்களா? எமது மின்இரவல்-அட்டை மூலமாக வருடாந்தம் 30 பிராங் செலுத்தி இலாபமடையுங்கள்.
www.pbz.ch/abonnemente

பிள்ளைகளுக்கான செய்முறைக்காட்சிகள், இலக்கிய வட்டம், கண்காட்சிகள், புத்தகங்கள் குறித்த எடுத்துக் காட்டுகள், வாசிப்புகள், யோகாசனம், ஆய்வுப் பட்டறைகள், இசைநிகழ்வுகள் மற்றும் இன்னும் அதிகமானவைகளை நீங்கள் கண்டு களியுங்கள். அதிக நிகழ்வுகள் இலவசமானவை (நிதி சேகரிக்கப்படும்).
www.pbz.ch/events

14 PBZ-நூலகங்களில் ஒன்றில் நீங்கள் உங்கள் பதிவை மேற்கொள்ளலாம். அல்லது நீங்கள் வசதியாக வீட்டில் இருந்தபடியே றறற.டிண.உா.்.அவைபடநைன-றநசனநெ எனும் இணையத்தளத்தில் உங்களைப் பதிவுசெய்வதுடன் உடனடியாகவே வங்கி அட்டை மூலம் உங்கள் கட்டணத்தைச் செலுத்தலாம். இதன் பின்பு உடனடியாகவே நீங்கள் டிஜிற்றல் வசதிகளைப் பாவித்துக் கொள்ளலாம் (சிறிய வருட அட்டை தவிர).

நூலக அடையாள அட்டையைப் பெற்ற பின்பு, ஒரு அன்பளிப்புத் தொகை யாகவோ அல்லது இதற்கு ஊக்கமளிக்கும் எமது அமைப்பில் உறுப்பினராக இணைவதன் மூலமோ சூரிச் பொது நூலகத்தை தொடர்ந்து வைத்திருக்க மற்றும் அதை புனரமைக்கத் தேவையான முக்கிய உதவிகளை வழங்குங்கள். இந்த உதவிகளின் பலனாகவே பலவிதமான நிகழ்வுகள் சாத்தியமாகின்றன. அன்பளிப்புத்தொகை வழங்குவது குறித்த மேலதிக விபரங்களை எமது இணையத்தளமான www.pbz.ch/spenden இல் காணலாம், ஊக்கமளிக்கும் அமைப்புக் குறித்து www.pbz.ch/förderverein இல் காணலாம்.

எமது அனைத்து வசதிகள் குறித்த மேலதிக தகவல்களை நீங்கள் www.pbz.ch எனும் இணையத்தளத்தில் பெற்றுக்கொள்ளலாம் அல்லது எமது கைநூலான «Die PBZ kurz erklärt», இல் காணலாம், இதை நீங்கள் அனைத்து PBZ-நூல்நிலையங்களிலும் அல்லது இணையத்தளமான www.pbz.ch/mitglied-werden இல் பெற்றுக்கொள்ளலாம்.





## சந்தாப்பணம் மற்றும் கட்டணங்கள

| | | |
|---|---|---|
| பிள்ளைகள் மற்றும் இளையோர் 16 வயது வரை | ஒரேவேளையில் ஆகக் கூடியது 25 பொருட்கள்<br>+ மின்-ஊடகம் | இலவசம் |
| வருட அட்டை plus | ஒரேவேளையில் ஆகக் கூடியது **50** பொருட்கள்<br>+ மின்-ஊடகம் | CHF 95 |
| வருட அட்டை | ஒரேவேளையில் ஆகக் கூடியது **25** பொருட்கள்<br>+ மின்-ஊடகம் | CHF 70 |
| 25 வயது வரையான கற்பவர்கள், மாணவ மாணவிகள், உயர்கல்வியாளர்கள், பயிற்சிபெறுபவர்களுக்கான வருட அட்டை | ஒரேவேளையில் ஆகக் கூடியது **25** பொருட்கள்<br>+ மின்-ஊடகம் | CHF 40 |
| தொழில் இழந்தவர்கள், IV - ஓய்வூதியம் பெறுபவர்கள், KulturLegi க்கான வருட அட்டை | ஒரேவேளையில் ஆகக் கூடியது **25** பொருட்கள்<br>+ மின்-ஊடகம் | CHF 40 |
| சிறிய வருட அட்டை. | ஒரேவேளையில் ஆகக் கூடியது **2** பொருட்கள் | CHF 40 |
| சிறிய வருட அட்டை KulturLegi உடன் அதேபோன்று அடையாளஅட்டை N/F | ஒரேவேளையில் ஆகக் கூடியது **2** பொருட்கள் | இலவசம் |
| மாத அட்டை | | CHF 15 |
| ஒருமுறை இரவல் பெறுவதற்கு | | CHF 5 |
| மின்இரவல்அட்டை | மின்-ஊடகம் | CHF 30 |
| புத்தகம்-எடுத்துச்- செல்லல் | | CHF 3 / பொருள் |
| பிரதி அட்டை | | CHF 5 |
| பதிவுசெய்தல்கள் | | CHF 3 / பொருள் |
| முழுவதையும் திருப்பி ஒப்படைக்காமை | | CHF 3 |
| 1. வது எச்சரிக்கை | | CHF 3 |
| 2. வது எச்சரிக்கை + CHF 10 | | CHF 13 |
| 3. வது எச்சரிக்கை + CHF 20 | | CHF 33 |
| செயற்படுத்துவற்கான கட்டணம் | | CHF 20 |





## இரவல்பெறும் காலவரையறை

| | இரவல்பெறும் காலவரையறை | நீடித்தல் |
|---|---|---|
| DVD (திரைப்படம்) | 1 கிழமை | இரு தடவை 1 கிழமை |
| எடுத்துச்- செல்லல் | 2 கிழமைகள் | செய்ய முடியாது |
| புதிய கதைப்புத்தகம்* | 4 கிழமைகள் | செய்ய முடியாது |

* டொச் மொழியிலான பெரியவர்களுக்கான கதைப் புத்தகங்கள் பெற்றுக்கொண்ட முதல் 6 மாதங்களுக்கு.

## நீடித்தல்

நீடித்தலை நூலகத்தில், தொலைபேசி மூலமாக அல்லது www.pbz.ch இணையவழியாக மேற்கொள்ளலாம்- இருப்பினும் மின்னஞ்சல் மூலமாக இல்லை.

## நூலகப் பட்டியல்

நங்கள் வீட்டில் வசதியாக இருந்து மீடிணு இன் முழுப் பட்டியல்களையும் ஆராய்ந்து தேடுவதுடன் தேவைப்படின் முற்பதிவு செய்துகொள்ளலாம். இப்பட்டியலை www.pbz.ch இல் காணலாம்.

